JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **82/2019** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 2** | Prosecution /Defence / Court | |
| Name | சிங்கியா | Village | Railway colony, Erode |
| Husband's Name | அல்ஸ்டர் கான்ரெட் மெலோனி | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 05.08.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு ஈரோடு CSI நர்சரி பள்ளியில் KG ஆசிரியராக ஆக வேலை பார்த்து வருகிறேன். ஜோசப் ரேமோன் மெலோனி எனது இளைய மகன் ஆவார். என்னுடைய இளைய மகன் கோவை CS கல்லூரியில் வேலை பார்த்து வந்தவர் பொங்கல் விடுமுறை முடிந்து ஈரோட்டில் இருந்து TVS Star city TN 33 BK 4479 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் புறப்பட்டு சென்றபோது விஜயமங்கலம் வாய்ப்பாடி பிரிவில் காலை 5.45 மணிக்கு ஏதோ ஒரு வாகனம் என் மகனின் வாகனத்தின் மீது மோதியதில் அவருக்கு தலையில் பலத்த ரத்த காயம் ஏற்பட்டு விட்டதாக காலை 6 மணி சுமாருக்கு அவ்வழியாக சென்ற யாரோ ஒருவர் என் மகனின் சட்டை பாக்கெட்டில் இருந்த போனை எடுத்து பார்த்தும் சட்டை பாக்கெட்டில் இருந்த என் மூத்த மகனின் நம்பரை தொடர்பு கொண்டு என் இளைய மகனுக்கு சாலை விபத்து ஏற்பட்டு ஏற்பட்டுவிட்டது என்றும் அவரை பெருந்துறை அரசு மருத்துவமனையில் சேர்த்து இருப்பதாக கூறியதன் பேரில் நானும், என் மகனும், என் கணவரும், உறவினர்களும் வந்து பார்த்தபோது என் மகனுக்கு தலையிலும், நெற்றிக்கு மேல் பலத்த ரத்தக்காயம் ஏற்பட்டு இறந்துவிட்டார்.

2. அதன் பின்னர் அன்றைய தினம் பெருந்துறை காவல் நிலையத்திற்கு சென்று என் மூத்த மகன் அ.சா.1 வாகன விபத்து சம்பந்தமாக புகார் ஒன்றை பெருந்துறை காவல் நிலையத்தில் கொடுத்ததின் பேரில் பெருந்துறை அரசு மருத்துவமனையில் பிரேத கிடங்கில் வைத்துள்ள என் இளைய மகனின் பிரேதத்தின் மீது பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரேத விசாரணை மேற்கொண்ட போது நான் உடனிருந்தேன். என் இளைய மகனின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்க எனக்கு தெரிந்த விவரங்களை கூறினேன். என் கணவர் பெயர் மேலோனி அஃலிசன் காண்ட்ரிட் ஆகும். அவர் கடந்த 17.08.2022 ம் தேதி அன்று இறந்து விட்டார். போலீசார் விசாரிக்கும் போது என் கணவரின் பெயர் அல்ஸ்டர் கான்ரெட் மெலோனி என தவறுதலாக குறிப்பிட்டு விட்டனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) போலீசார் என்னை ஒருமுறை விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை